*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி*
*சென்னை – 4*
*19-08-2025 TUESDAY 7.15 PM*
***ஆகாஷ்வாணி***

***தலைப்புச் செய்திகள்***

- *பிரதமர் திரு நரேந்திர மோடியின் சீன பயணம் இருதரப்பு உறவுகளை மேம்படுத்தும் என்று அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு Wang Yi தெரிவித்துள்ளார்.*
- *சுரங்க, கனிம வள மேம்பாடு, ஒழுங்குமுறை சட்டத்திருத்த மசோதாவுக்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.*
- *ஒடிஷா மற்றும் ராஜஸ்தானில் 9 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான கட்டமைப்புத் திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.*
- *யுக்ரைன் போர் நிறுத்தம் தொடர்பாக, அமெரிக்க அதிபர் திரு Donald Trump இன்று ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புதினை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.*
- *ஆசிய கோப்பை டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டித்தொடருக்கான 15 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.*

*- இனி விரிவான செய்திகள் –*

*<<<<<<>>>>>*

*பிரதமர் திரு நரேந்திர மோடியின் வருகையை சீனா ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாக அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு Wang Yi தெரிவித்துள்ளார்.*

*புதுதில்லியில் இன்று தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவலை சந்தித்து பேசிய அவர், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சிமாநாட்டில் பங்கேற்க பிரதமர் திரு நரேந்திர மோடி மேற்கொள்ளும் பயணத்தை முக்கியத்துவம் வாய்ந்ததாக சீனா கருதுகிறது என்று கூறினார்.*

*பிரதமர் திரு நரேந்திர மோடி, Kazan நகரில் சீன அதிபர் திரு Xi Jinping-ஐ சந்தித்து பேசிய பிறகு, இருதரப்பு உறவு சீரடைந்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.*

*இந்தியா – சீனா நட்புறவு மேம்பட்டு வருவதுடன் எல்லைப்பகுதியிலும் அமைதி நிலவுவதாகவும் அவர் கூறினார்.*

*பல்வேறு அம்சங்களில் இருநாடுகள் இடையே ஒருமித்த கருத்தை உருவாக்க சீனா தொடர்ந்து பாடுபடும் என்றும் திரு Wang Yi தெரிவித்தார்.*

*<<<<<<>>>>>*

சுரங்க மற்றும் கனிம வள மேம்பாடு ஒழுங்குமுறை சட்டத்திருத்த மசோதாவுக்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

ஏற்கனவே, மக்களவையில் நிறைவேற்றப்பட்ட இந்த மசோதா இன்று மாநிலங்களவையிலும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தற்போது, கனிம வள சுரங்கங்களை குத்தகைக்கு எடுத்துள்ளவர்கள், மேலும் சுரங்கங்களை குத்தகைக்கு எடுக்க மாநில அரசுகளிடம் விண்ணப்பிப்பதற்கு இந்த மசோதா வகை செய்கிறது.

லித்தியம், கிராஃபைட் நிக்கல், கோபால்ட், தங்கம், வெள்ளி உள்ளிட்ட தாதுக்களை வெட்டி எடுப்பதற்கு கூடுதல் கட்டணம் ஏதுமின்றி சுரங்கங்கள் செயல்படுவதற்கும் இந்த மசோதா வகை செய்கிறது.

கனிமவள சுரங்கங்களை முறைப்படுத்துவதற்கான பதிவுகளை மேற்கொள்வதற்கு அதிகாரம் கொண்ட அமைப்பை ஏற்படுத்துவதற்கும் இந்த மசோதா வகை செய்கிறது.

மாநிலங்களவையில் இன்று கனிமவள மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை சட்டத்திருத்த மசோதா மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய சுரங்கத்துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி, அரசு மேற்கொண்ட சீரிய நடவடிக்கைகளால் சுரங்கத்தொழில் மேம்படும் என்றும், நிலக்கரி மற்றும் இதர கனிம வளங்களின் உற்பத்தி கணிசமாக அதிகரிக்கும் என்றும் தெரிவித்தார்.

சுரங்கங்களை மத்திய அரசு வெளிப்படைத் தன்மையுடன் ஒதுக்கீடு செய்ததால், மாநிலங்களுக்கு ஆறு லட்சத்து 85 ஆயிரம் கோடி ரூபாய் வரை கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் சிறப்பான வழிகாட்டுதல் காரணமாக நிலக்கரி உற்பத்தி ஒரு பில்லியன் டன் என்ற அளவை முதல் முறையாக கடந்துள்ளதாகவும் திரு கிஷன் ரெட்டி, தெரிவித்தார்.

<<<<<<>>>>>

இந்திய மேலாண்மை கல்விக்கழக சட்டத்திருத்த மசோதா இன்று மக்களவையில் நிறைவேறியது.

முன்னதாக, இம்மசோதாவை அவையில் தாக்கல் செய்து பேசிய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான், நாட்டின் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ள குவஹாத்தி இந்திய

மேலாண்மை கல்விக்கழகத்தை 550 கோடி ரூபாய் செலவில் உலகத்தரத்திலான கல்வி நிறுவனமாக உயர்த்துவதற்கு இம்மசோதா வகை செய்வதாக தெரிவித்தார்.

நாட்டில் தற்போது 21 இந்திய மேலாண்மை கல்விக்கழகங்கள் சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

துபாயில் அடுத்த மாதம் இந்திய மேலாண்மை கல்விக்கழகத்தின் வளாகம் அமைக்கப்பட உள்ளதாகவும் திரு தர்மேந்திர பிரதான் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>

ஒடிஷா மற்றும் ராஜஸ்தானில் சுமார் 9 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான இரண்டு திட்டங்களை செயல்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திற்குபின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், புவனேஷ்வரில் 8 ஆயிரத்து 307 கோடி ரூபாய் செலவில் ஆறு வழி புறவழிச்சாலை அமைக்க அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

இந்த புறவழிச்சாலை அமைக்கப்படுவதால், புவனேஷ்வர், கட்டாக் மற்றும் கோர்தா நகரங்களில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் குறைவதுடன், பொருளாதார வளர்ச்சியும் அதிகரிக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

இதேபோன்று, ராஜஸ்தான் மாநிலம் Kota – Bundi பகுதியில் ஆயிரத்து 507 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பசுமை விமான நிலையம் அமைக்கவும் அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

பசுமை ஹைட்ரஜன் ஏற்றுமதியில் இந்தியாவை உலகின் முன்னணி மையமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை இணையமைச்சர் திரு ஸ்ரீபத் யசோ நாயக் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இந்திய தொழில் வர்த்தக சம்மேளனத்தின் மாநாட்டில் பேசிய அவர், உலகின் ஹைட்ரஜன் தேவையில் பத்து சதவீதம் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் என்று கூறினார்.

ஹைட்ரஜன் உற்பத்திக்கென தர பரிசோதனை மையம் அமைக்கப்பட்டு வருவதுடன், அதன் தரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், 100 வகையான விதிமுறைகள் பின்பற்றப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

2030-ஆம் ஆண்டுக்குள் ஐந்து மில்லியன் மெட்ரிக் டன் அளவிற்கு பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி செய்ய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளதாகவும் திரு ஸ்ரீபத் யசோ நாயக் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தேர்தல் நடைமுறைகளை மேம்படுத்தவும், ஒழுங்குபடுத்தவும் கடந்த ஆறு மாதங்களில் சீரிய நடவடிக்கைகள் மேற்கொண்டதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதுதொடர்பாக இன்று வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், அனைத்துத்தரப்பினரும் தேர்தல் நடைமுறையில் பங்கு கொள்வதை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் கட்டமைப்பை வலுப்படுத்தவும், தேவையில்லாதவற்றை நீக்கவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியலில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்யவும் மக்கள் சிரமமின்றி வாக்களிக்கவும் தேவையான வசதிகளை தேர்தல் ஆணையம் முன்னெடுத்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

கடந்த ஆறு மாதங்களில் தேர்தல் நடைமுறையை மேம்படுத்த 28 புதிய முயற்சிகள் செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும் அது கூறியுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகளை முழுமையாக கண்காணித்து, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பீகாரில் சிறப்பு வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் சீரிய முறையில் மேற்கொள்ளப்பட்டதாகவும் அரசியல் கட்சிகள் சார்பில் நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி முகவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

அமெரிக்க அதிபர் திரு டொனல்டு ட்ரம்ப் இன்று ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புதினை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

இந்த உரையாடல் குறித்து, ரஷ்ய அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், அமெரிக்க அதிபர் திரு டொனல்டு ட்ரம்ப் வாஷிங்டனில், யுக்ரைன் அதிபர் திரு விளாடிமிர் ஜெலன்ஸ்கி மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்தியபின் திரு புதினுடன் தொலைபேசியில் உரையாடி இருப்பது சர்வதேசஅரசியலில் முக்கியத்துவம் வாய்ந்ததக தெரிவித்துள்ளது.

வரும் நாட்களில் யுக்ரைன் மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து நடைபெறும் பேச்சுக்களில் இரு தலைவர்களும் உயர்மட்ட அதிகாரிகளுடன் கலந்துகொள்வது என முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுக்ரைன் பிரச்சினைக்கு ரஷ்யாவும், அமெரிக்காவும் இணைந்து பேச்சுக்கள் நடத்திவரும் நிலையில், இந்த விஷயத்தில் மேற்கொண்டு எவ்வித நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டாம் என இங்கிலாந்து அதிகாரிகளை ரஷ்யா கேட்டுக்கொண்டுள்ளது.

சண்டை நிறுத்தத்திற்குப்பின் இங்கிலாந்து படைகளை பாதுகாப்பு என்ற பெயரில் நிறுத்தி வைக்கும் முயற்சி, அமைதி பேச்சுக்களுக்கு இடையூறாக இருக்கும் என்று ரஷ்ய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் திருமதி மரியா ஜக்காரோவா தெரிவித்துள்ளார்.

தவறான உலக அரசியல் நடவடிக்கைகளில் இங்கிலாந்து ஈடுபடக்கூடாது என்றும், இதனால் தூதரக உறவுகளில் பாதிப்பு ஏற்படக்கூடும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

<<<<<<>>>>>

## விளையாட்டுச் செய்திகள்

ஆசிய கோப்பை டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டித்தொடருக்கான 15 பேர் கொண்ட இந்திய அணியை பிசிசிஐ அறிவித்துள்ளது.

இந்த அணியின் கேப்டனாக சூரியகுமார் யாதவும், துணை கேப்டனாக சுப்மன் கில்லும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

எட்டு நாடுகள் பங்கேற்கும் இப்போட்டிகள் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் அடுத்த மாதம் 9-ஆம் தேதிமுதல், 28-ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

-------------

உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டித்தொடரில் பங்கேற்பதற்கான 15 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

*ஹர்மன் பிரித் கவுர் கேப்டனாகவும், ஸ்மிருதி மந்தானா துணை கேப்டனாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.*

----------------

*பல்கேரியா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*Sofia-வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 6-4, 6-3 என்ற செட் கணக்கில். போலந்தின் Pieczonka -வை வென்றார்.*

------------

*ஆசிய துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவின் மனுபாக்கர் வெண்கலப்பதக்கம் வென்றார்.*

*கஸகஸ்தானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் பத்து மீட்டர் ஏர்பிஸ்டல் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

*மகளிர் குழு பிரிவில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.*

---------------

*Perth-ல் நடைபெற்றுவரும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஹாக்கிப் போட்டித் தொடரின் மூன்றாவது ஆட்டத்தில் இந்தியா 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.*

*<<<<<<END>>>>>*